| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வெங்கடாசலம் | நாள் | 08.12.2021 |
| தகப்பனார் பெயர் | ஏழுமலை | | |

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம்பிரதிவாதி எதிர்வழக்குரையுடன் 2014ல் தாக்கல் செய்த ஆவணங்களை தெரிந்து கொண்டேனா என்றால் அவைகள் பொய்யான ஆவணங்கள். அரசு அதிகாரிகளை ஏன் இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் பட்டாவை உடைத்து மாதையன் பெயரை சேர்த்துவிட்டார்கள். நீக்க கோரி மனுகொடுத்தும், நீக்கவில்லை. ஆகவே சேர்த்துள்ளோம். ச.எண்.65/10 தற்போது இல்லை என்றால் உள்ளது. 65/10 எப்போது உடைந்தது என்றால் 1992ல் 65/10சி1, 10சி2 என உடைந்தது. 21 வருடங்களாக நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் உள்ளதா என்றால் வழக்கு நடந்து கொண்டு தான் உள்ளது. அ.வ.எண்.183/2013 வழக்கு எங்களுக்கெதிராக ஏற்கனவே பிரதிவாதிகள் தீர்ப்பு பெற்றுள்ளனர் என்றால் அதற்கான மனு தாக்கல் செய்துள்ளோம். 2019ல் தான் மனுதாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். கந்தகவுண்டர் மற்றும் பழனியம்மாள் ஆகியோரிடமிருந்து 04.05.1954ல் 46 செண்ட் வாங்கிய ஆவணத்தை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் போலியான பத்திரம். அந்த பத்திரத்தில் கந்தகவுண்டர், பழனியம்மாள், ஏழுமலை ஆகிய அனைவரும் தரப்பினர்களாக இருந்துள்ளனர் என்றால் அவர்கள் யாரும் கையெழுத்து போடவில்லை பொய்யான பத்திரமாகும். மீதியுள்ள 46 செண்டை வாய்மொழி பரிவர்த்தனை மூலம் பிரதிவாதிகள் கொடுத்துவிட்டோம் எனவும், அதன் அடிப்படையில் 92 செண்டும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் பாட்டி பெயரில் தான் தற்போது உள்ளது. கிணறில் கூட்டுரிமை உள்ளதால் அதன் அடிப்படையில் ஏற்பட்ட கூட்டு பட்டாவை வைத்து உரிமை கோருகிறோம் என்றால் கூட்டுப்பட்டாவே இல்லை. 1973லிருந்தே பட்டா உள்ள நிலையில் அதனை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் பட்டா உள்ளது 1973ல் தான் தெரியும். 1935ல் உள்ள பழைய பத்திரத்தை வைத்து கொண்டு விற்பனை செய்தது, சுவாதீனம், உட்பிரிவு ஆகியவற்றை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 23 செண்டிற்கு வா.சா.ஆ–14ன் மூலம் குதவை வைக்கப்பட்டுள்ளது எனவும், 92 செண்டிற்கு வைக்கப்பட

வில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் 14 வரையிலான ஆவணங்கள் பட்டாவிற்கு முன்புள்ள ஆவணங்கள் என்றால் அதற்கு எவ்வித சட்ட வலுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சர்வே எண்ணிலுள்ள சொத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்துகொண்டதற்காக மாதையன் மகன் மாரியப்பனுக்கு வேலை கொடுத்து தற்போது வரை 15 வருடங்களாக வேலை செய்துவருகிறார் என்றால் அது பொய். வா.சா.ஆ.8 யாருக்கும் அனுப்பவில்லை எனவும், யாரும் பெறவில்லை எனவும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகளை சேர்க்க எவ்வித முகாந்திரமும் இல்லை எனவும், வழக்கில் சேர்ப்பதற்காக அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே மாதையனுக்கு வழக்கு சொத்து குறித்து தீர்ப்பு இருப்பதால் இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நானோ வாதிகளோ சுவாதீனத்தில் இல்லை எனவும், ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

பட்டாவில் மாதையன் பெயரை சேர்த்துள்ளார்கள் அதனை நீக்கவில்லை. ஆகவே அரசு அதிகாரிகளை சேர்த்துள்ளோம். அதற்கான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு மனு கொடுக்கவிலலை எனவும், அவ்வாறு மனு கொடுத்திருந்தாலும் உயர் அதிகாரிகளிடம் தான் பரிகாரம் தேட முடியும் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் ஆவணங்களின் அடிப்படையிலும், சுவாதீனத்தின் அடிப்படையிலும் தான் உத்தரவு பிறப்பிப்பார்கள் எனவும், தனிப்பட்ட காரணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம். நீதிமன்ற தீர்ப்பிற்கு பிரதிவாதிகள் கட்டுப்படுகின்றனர் என்றால் ஆமாம்.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.